# மனைப்பொருளியல்

## சிறப்பான வாழ்க்கைச்சூழல்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education


**தேர்ச்சி மட்டம்: 1.1**

## 1.1 சிறப்பான வாழ்க்கைச் சூழலின் பல்வேறு அம்சங்கள்.



மனிதனின் நிலைபேறான வாழ்க்கைக்காக பௌதீக மற்றும் சமூகச் சூழலின் இணக்கப்பாடு காரணமாக உருவாகும் சூழல் சிறந்த வாழ்க்கைச் சூழல் எனப்படும்

### சிறந்த வாழ்க்கைச் சூழலின் கட்டமைப்பு




தொகுப்பு : திருமதி கருணாமலர் மோகனசுந்தரம் , ஆசிரிய ஆலோசகர் - (வலயக்கல்வி அலுவலகம் , வலிகாமம்)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த.தொ.தொ. (மு/உடையார்கட்டு. மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



### சமூகச் சூழல்



குடும்ப உறுப்பினர்களினதும் ஏனையோரினதும் எதிர்பார்ப்புக்கள், சமூக நடத்தைகள் விருப்பு வெறுப்புகள் ஆகியன அடங்கிய சூழல் சமூகச் சூழல் ஆகும்

### பௌதீக வாழ்க்கைச் சூழல்

மனித தேவைகளிற்கமைய முகாமை செய்யப்பட்ட சூழலே தற்கால பௌதீக வாழ்க்கைச் சூழல் ஆகும்

**பௌதீக வாழ்க்கைச் சூழலின் பகுதிகள்**

1. உள்ளக வெளி நிர்மாணிப்பு
2. கட்டடங்கள் நிலத்தோற்ற நிர்மாணிப்பு
3. கிராமிய நகரச் சூழல் நிர்மாணிப்பு

**உள்ளக வெளி நிர்மாணிப்பின் இயல்புகள்**



⇒ மனிதனின் வாழ்விடமாக அமைந்த மூடிய வெளி அமைப்பு.

⇒ வாழ்விற்கு சௌகரியமாக அமைந்திருக்கும்.

உ+ம் : குகைகளில் தவாளிப்பு செதுக்கியமை ,

தற்காலத்தில் குழாய் அமைப்பு மாதிரி குகைகளினுள் நீர் வழிந்தோடும் அமைப்பு

⇒ உள்ளக வெளி நிர்மாணிப்பு இன்று தொழினுட்ப மேம்பாடு காரணமாக மிக உயர்வான விருத்தி மட்டத்தை அடைந்துள்ளது.

⇒ உள்ளக வெளி நிர்மாணிப்பானது விஞ்ஞான ரீதியாகவும் கலைத்துவ ரீதியாகவும் சௌகரியமான அமைப்பினைப் பெற்று உயர்வான விருத்தி மட்டத்தை எட்டியுள்ளது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk